[25th March 1964

புலவர் கா. கோவிந்தன் : மதுரையில் அமையவிருக்கும் பல்கலைக் கழகத்திற்கு திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெயரிடும் கட்டம் இன்னும் வரவில்லை.

Agricultural loan

* 392 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount of agricultural loan sanctioned to Sri C. Purushothama Reddiar, M.L.A., of Pondicherry on the security of lands owned by him in some villages in Cuddalore taluk of South Arcot district about nine years ago;

(*b*) the amount of principal and interest recovered so far; and

(*c*) the amount of arrears due from him as on 1st December 1963?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the Table of the House.

(அ), (இ) & (உ) : இது குறித்து சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வண்டிகளுக்கான வரி செலுத்தும் விதம்

* 393 **கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையில் இருப்பது போலவே வெளி மாவட்டங்களிலும் மோட்டார் உரிமையாளர்கள் செக் மூலமாக வரியினைச் செலுத்த ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஏற்பாட்டினை ஒரு தடவை பரிசீலனை செய்துவிட்டு விட்டோம். இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய அரசாங்கம் உத்தேசிக்கிறது.

நியாய விலைக் கடைகள்

* 394 **கேள்வி—திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏற்கெனவே திறக்கப்பட்டிருக்கும் நியாய விலைக் கடைகளை மூடிவிடும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமென்றால் காரணமென்ன ?

---

a Printed as Appendix I on page 334 infra.